# கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

# திருவாரூர்.

## CC.No.14 / 2022

2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 6 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரியா | வயது | 25 |
| தந்தை பெயர் | சாமிநாதன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் உள்ள வடவேற்குடியில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். அ.சா 1 ஆனந்தி எனது தோழி ஆவார். 1வது எதிரி ஹரிகரசுதன் ஐ தெரியும். அவர் தற்போது கோர்டில் ஆஜர் இல்லை. ஆஜர் எதிரிகள் 1 வது எதிரியின் பெற்றோர்கள் ஆவார்கள். எதிரிகள் 4 மற்றும் 5 வது எதிரி தற்போது ஆஜரில் இல்லை. நானும் அ.சா 1 ம் காஞ்சிபுரத்தில் ஒன்றாக வேலை பார்த்து வந்தோம். சென்னை எங்களுக்கு புதிய இடம் என்பதால் ஒரு நண்பரின் மூலம் எதிரி 1 ஹரிகரசுதன் என்பவர் எங்களுக்கு பழக்கம் ஆனார். அவர் மூலம் நானும், அ.சா 1 மற்றும் 5 நபர்களும் சேர்ந்து வாடகை வீட்டில் குடியிருந்தோம். அதன் பின்னர் எதிரி 1ம், அ.சா. 1ம் காதலித்து வந்தனர். பின்பு நாங்கள் shift க்கு போயிருந்த நேரத்தில் எதிரி 1, அ.சா 1 யை தான் தங்கியிருந்த ஒரக்கடத்தில் உள்ள அவரது வீட்டிற்கு காதலிப்பதாக கூறி அழைத்து செல்வார். அ.சா 1 மிகவும் வெகுளியான குணம் உள்ளவர். யார் எது சொன்னாலும் உடனே நம்பி விடுவார். நானும் மற்ற தோழிகளும், அ.சா 1 யை கண்டித்தோம். 1 வது எதிரிக்கு அ.சா1ம் இருந்து Sex மட்டும் தான் தேவை பட்டது. அது கிடைத்ததும் அ.சா 1 யை 1 வது எதிரி கைவிட்டுவிட்டார். 2021ம் ஆண்டு நாங்கள் திருவாரூர் வந்து விட்டோம். அ.சா.1 கருவுற்றார். 1 வது எதிரியை தொடர்பு கொண்டு அ.சா.1 கருவுற்று இருக்கும் விபரத்தை கூறினோம். அதன் பின்னர் 1 வது எதிரி எங்கள் அனைவரின் நம்பரையும் block செய்து விட்டார். அதன் பின்னர் 3 மாதம் நாங்கள் அவரை தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தை நடத்த முயற்சி செய்தோம். அவர் எதற்கும் ஒத்துழைக்கவில்லை. அதனால் திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அ.சா. 1 எதிரிகள் மீது புகார் கொடுத்தார். அதன் பின்னர் எனது பெற்றோர் அ.சா 1ம் பேச வேண்டாம் என்று கூறியதால் நானும் சில நாட்கள் அவருடன் பேசவில்லை. அ.சா 1 தனக்கு 1 வது எதிரியுடன் திருமணம் ஆன புகைபடத்தை எனக்கு அனுப்பி வைத்தார். 1 வது

எதிரியின் பெற்றோர்கள் முன்னிலையில் கோரையார் காளியம்மன் கோவிலில் மேற்படி திருமணம் நடைபெற்றது. அதன் பின்னர் 20 நாட்கள் நன்றாக இருப்பதாக கூறினார். 20 நாட்கள் கழித்து ஒரு நாள் என்னிடம் போன் செய்து அ.சா.1 அழுதார். வேலைக்கு சென்றுவிட்டு தன்னை அழைத்து செல்வதாக கூறிவிட்டு மீண்டும் வந்து தன்னை அழைத்து செல்லவில்லை என்று கூறி அழுதார். அப்போது தான் அ.சா 1ன் திருமணம் ஆனபிறகும் 1வது எதிரி அவரை கைவிட்டு விட்டு சென்றுவிட்டார் என்ற விபரம் எங்களுக்கு தெரியவந்தது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

# கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

# திருவாரூர்.

# CC.No. 14 /2022

2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 7- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரசியா | வயது | 47 |
| கணவர் பெயர் | முருகையன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் இருந்து வருகிறேன். அ.சா 1 ஆனந்தி எனது கொழுந்தனார் மகள் ஆவார். ஆஜர் 2, 3 எதிரிகள் மற்றும் ஆஜரில் இல்லாத 1, 4, 5 எதிரிகள் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் 2, 3 எதிரிகள் அ.சா. 1 ன் மாமனார் மற்றும் மாமியார் ஆவார்கள். 1வது எதிரி ஹரிகரசுதன் அ.சா 1ன் கணவர் ஆவார். அ.சா 1ம், 1வது எதிரியும் பக்கத்து பக்கத்து இடத்தில் வேலை பார்த்தார்கள். சென்னையா, திருப்பூரா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. 1வது எதிரி அ.சா1 க்கும், அவரது தோழிகளுக்கும் ரூபாய். 5000/- செலவில் ரூம் பார்த்து தங்கவைத்தார். அ.சா 1ம், 1வது எதிரியும் பொங்களுக்கு ஊருக்க வந்துவிட்டார்கள் எந்த ஊர் என்று எனக்கு தெரியவில்லை. அ.சா 1 ஆனந்தி வடபாதிமங்கலத்திற்கு வந்துவிட்டார். ஊருக்கு வந்த பின்னர் அ.சா 1, 1வது எதிரியுடன் போனில் பேசிக் கொண்டிருந்தார். சிறிது காலம் கழித்து 1 வது எதிரி அ.சா 1ன் பேசுவதை நிறுத்திவிட்டார். அதன் பின்னர் அ.சா 1, 1 வது எதிரி ஹரிகரசுதன் வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன் பின்னர் அ.சா 1 யை வடபாதிமங்கலம் காவல் நிலைத்தில் ஆஜர் 2 , 3 எதிரிகள் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டனர். அ.சா. 1 கருவுற்றிருந்தார். காவல் நிலையத்தில் இருதரப்பினரிடமும் விசாரணை செய்தார்கள். அப்போது எதிரிகள் 1 வது எதிரியை அ.சா 1 க்கு திருமணம் செய்து வைப்பதாகவும், அதற்கு 5 நாட்கள் கால அவகாசமும் கேட்டார்கள். அதனால் மேற்படி 5 நாட்கள் அ.சா 1 எனது வீட்டில் வைத்திருந்தோம். அதன் பின்னர் காவல் நிலையம் சென்றோம். அங்கு திருமணம் செய்து அழைத்து வரும்படி கூறினார்கள். பின்னர் அ.சா 1க்கும், 1 வது எதிரிக்கும் மன்னார்குடியில் உள்ள கோரையார் காளியம்மன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. 1 வது எதிரியின் சார்பாக அவரது தகப்பனார், அவரது அக்கா , அவரது அக்காவின் கணவர் மற்றும் நண்பர் வந்திருந்தனர். அ.சா. 1ன் சார்பாக நான், அ.சா.1ன் அக்காவின் கணவர் மற்றும் கிராம தலைவர் ஒருவர் வந்திருந்தோம். அதன்பின்னர் வடபாதிமங்கலம் காவல் நிலையத்திற்கு வந்தோம். அங்கு அ.சா 1 மற்றும் 1 வது

எதிரியை புகைபடம் எடுத்துக் கொண்டார்கள். அதன் பின்னர் 1 வது எதிரி தனது அக்காவின் திருமணம் முடிந்த பின்னர்தான் அ.சா 1 ன் தனதுவீட்டில் வாழ முடியும். அதுவரை நான் அ.சா. 1ன் உடைய வீட்டில்தான் இருப்பேன் என்று சொன்ன காரணத்தினால் அ.சா 1 யும், 1 வது எதிரியையும் எனது வீட்டிற்கு அழைத்து சென்று வைத்திருந்தேன். சுமார் 20 நாட்கள் எனது வீட்டில் இருந்தனர். 20 நாட்கள் கழித்து வேலைக்கு சென்றுவிட்டு அ.சா 1 யை அழைத்து செல்வதாக கூறிவிட்டு 1 வது எதிரி சென்றுவிட்டார். அதன் பின்னர் அவரிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை. எனது வீட்டில் தங்கியிருந்த சமயத்தில் 1 வது எதிரி அ.சா. 1 க்கு மாத்திரை வாங்கி கொடுத்ததால் அ.சா 1 க்கு abortion ஆகிவிட்டதாக அ.சா 1 என்னிடம் தெரிவித்தார். 3 நாட்கள் கழித்து எனது தம்பி ஒருவர் வருவார் அவருடன் புறப்பட்டு சென்னையில் வந்து தங்கிகொள் என்று சொல்வதை நம்பி அ.சா 1ம், தனது உடைமைகளை எடுத்துக் கொண்டு இருந்தார். அதன் பின்னர் 1 வது எதிரி அ.சா. 1க்கு போன் செய்து தான் கேரளாவில் இருப்பதாகவும், அதனால் தற்போது சென்னைக்கு வரவேண்டாம் என்றும், அ.சா 1 யை எனது வீட்டில் இருக்க வேண்டாடாம் என்றும், அ.சா. 1ன் தந்தை வீட்டிற்கு சென்று இருந்து கொள்ளுமாறு சொல்லி உள்ளார். அதன்பின்னர் எந்த தகவலும் அவரிடமிருந்து வரவில்லை. அ.சா. 1 இது நாள் வரை அவரது தந்தை வீட்டில் இருந்து வருகிறார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
(Magistrate Level),
Tiruvarur.